Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 127/ 2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.5**

| | | | |
|---|---|---|---|
| Name : | வேல்முருகன் | Calling: | விவசாயம் |
| Father's Name: | சிவலிங்கம் | Religion: | இந்து |
| Village: | கொத்தகோட்டை | Age: | 37 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 16.08.2022

SIGN :

அ.சா. 5 முதன்மை விசாரணை.

நான் கொத்தகோட்டையில் வசித்து விவசாயம்செய்து வருகிறேன். அசா்1 எனது பெரியப்பா ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 11.07.2021 ம் தேதி ஞாயிற்று கிழமை காலை 7 மணிக்கு நான் உழவர் சந்தைக்கு சென்று விட்டு திரும்பி வரும்போது என்னுடைய பெரியப்பா வரப்பில் எதிரிகளுக்கும் எனது பெரியப்பாவுக்கும் சண்டை நடந்து கொண்டிருந்தது. அங்குள்ள முருங்கை மற்றும் எலும்பிச்சை செடிகளை எதிரிகள் மூவரும் வெட்டிவிட்டார்கள். அதை கேட்க சென்ற எனது பெரியப்பாவை ஆனந்த் என்பவர் கத்தியால் இடது கை மீது வெட்டி விட்டார். அதை நான் கேட்க சென்றேன் அப்போது மோனீஸ் மண்வெட்டியால் எனது அப்பா சிவலிங்கம் மோனீஸ், அரவிந்த் சண்டை போட்டுக்கொண்டு இருந்தார்கள் நான் அப்போது சண்டையை விலக்க சென்றேன். அப்போது எனது சட்டையை பிடித்த மோனீஸ் கீழே தள்ளி விட்டார் எதிரி அரவிந்த் இரும்பு ராடால் எனது இடது கை மீதும், மார்பு மீதும் அடித்து விட்டார். அதில் நான் மயக்கமாகி விட்டேன். நான் மயக்கம் தெளிந்து பார்க்கும்போது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிசிச்சை பெற்று இருந்தேன். எனது அப்பா சிவலீங்கத்தை எதிரி மோனீஸ் மண்வெட்டியால் வலது கை சுண்டு விரலில் வெட்டி காயம் ஏற்படுத்தி விட்டார். நாங்கள் மூவரும் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம். இந்த சம்பவத்தை வெங்கடாசலம் என்பவர் சண்டையை விலக்கிவிட்டுநேரில் பார்த்தவர் ஆவார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் 10 வகுப்பு வரை படித்துள்ளேன். நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் போலிசார் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால்சரிதான். நான் முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தவிர்த்து வேறு சங்கதிகள் போலிசார் விசாரணையில் கூறியிருந்தால் அது பொய் என்றால் சரிதான். எனது அப்பா சிவலிங்கம் என்பவரை அடித்து விட்டார்கள் என்பதை அவர் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனக்கு இடது முழங்கைக்கு கீழே காயம் ஏற்பட்டது. இந்த விவரத்தை மருத்துவா் என்னை விசாரித்தபோது கூறியிருக்கிறேன். என்னை தாக்கிய இரும்பு கம்பி சுமார் ஒன்னறை அடி நீளம் இருக்குமா என்றால் இருக்கும். இரண்டு கைவிரல் கனம் இருக்கும் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தபோது என்னை அடித்த சங்கதிகளையும் கம்பியையும் போலிசார் முன் காண்பித்தோமா என்றால் அடித்த சங்கதியை கூறினோம் கம்பியை நான் காட்டவில்லை. மேற்கண்ட விவரத்தை நான் மருத்துவமனையில் சேர்ந்த தேதியில் தான்போலிசாரிடம் சொன்னேன். அதன் பிறகாவது என்னை தாக்கிய கம்பியை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. போலிசாரிடம் கம்பியை யார் கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது நான் கேட்டு தெரிந்துக்கொள்ளவில்லை. என்னை அடித்த இடம் எனது பெரியப்பா நிலத்தில் தான் நடந்தது என்றால் பெரியப்பா நிலத்திற்கும் எதிரிகளின் நிலத்திற்கும் இடையே உள்ள வரப்பில் நடந்தது. எங்களது பெரியப்பா நிலத்தற்கு அருகில் சக்கரபாணி, ஏழுமலை மற்றும் எதிரிகளின் நிலம் உள்ளது. சம்பவத்தின்போது பக்கத்து நிலத்துக்காரர்கள் மற்றும் ஊர்காரர்கள் அங்கு வந்திருப்பார்களா என்றால் எங்களை தவிர்த்து வந்திருப்பார்கள். யார் யார் வந்தார்கள் என்று நான் கவனிக்கவில்லை. சம்பவத்தில் எனது தந்தைக்கு எந்த கையில் விரலில் அடிப்பட்டது என்று குறிபிட்டு சொல்லமுடியாது என்றால் வலது கையில் அடிப்பட்டது. எந்த விரலில் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எனது பெரியப்பாவின் கிணற்றுக்கு அருகே நடந்தது என்றால் சரியல்ல. முருங்கை, எலும்பிச்சை செடியின் அருகே சுமார் 3 அடி தொலைவில் நடந்தது. மயக்கம் எனக்கு சம்பவத்திற்கு பிறகு எப்போது தெளிவானது என்றால் அங்கிருந்து எழுப்பி உட்கார வைத்தபோது எனக்கு மயக்கம் தெளிந்தது. எத்தனை மணிக்கு நாங்கள் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் நேரம் எனக்கு ஞாபகம் இல்லை. காலையா மதியமா என்றால் காலையில் தான் சென்றோம். கோகிலா என்பவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனக்கு அண்ணி உறவு முறை ஆகும். கோகிலா என்பவர் தான் நாங்கள் வாணியம்பாடியில் இருக்கும் போது தான் சம்பவம் குறித்து தகவல் சொன்னார் என்றால் நாங்கள் வாணியம்பாடியில் இருந்து திரும்பி சென்று கொண்டிருந்தபோது அவர்தான் தகவல் சொன்னார். எனது பெரியப்பா சொத்திற்கு அருகே எனக்கு ஏதேனும் இருக்கிறதா என்றால் பொது சொத்து இருக்கிறது. எனது பெரியப்பா சொத்தை அவரது அண்ணன் தம்பிகள் 3 பேர்கள் பொதுவாக தான் அனுபவித்து வருகிறார்கள்என்றால் சரிதான். வரப்பு சம்மந்தமாகஎனது பெரியப்பாவிற்கும் எதிரிகளுக்கும் அடிக்கடி தகராறு வரும்

என்றால் சமீபத்தில் இந்த சம்பவம் தான் நடந்தது. அதற்கு முன்பு இல்லை. பெரியப்பாவின் சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. நாங்கள் அனுபவித்தவரும் சொத்தானது நீர் பிடிப்பு புறம்போக்கு என்றால் சரியல்ல. அநத சொத்து நீர் பிடிப்புபுறம்போக்கு என்பதினாலும் அதனை நாங்கள் ஆக்கிரமித்து உள்ளதால் அதன் வழியாக ஏரிக்கு செல்லகூடிய நீர் செல்லமுடியாத நிலையில் உள்ளதால் அது சம்மந்தமாக எதிரிகள் அரசாங்கத்திற்கு எங்களது ஆக்கிரமிப்பை அகற்ற கோரி மனு செய்து இருந்தால் எதிரிகளுக்கும் எங்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருந்தது என்றால்சரியல்ல. அந்த கருத்துவேறுபாட்டின் காரணமாக எதிரிகளுக்கும் எனது பெரியப்பா, பெரியம்மா இடையே வாய் தகராறு ஏற்பட்டு அப்போது அவர்கள் இருவரும் கல்தடுக்கி கீழே விழுந்ததால்தான் அவர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றால்சரியல்ல. எதிரிகள் தான் அடித்தார்கள். மேற்படிசம்பவத்தில் 2ம் எதிரி என் மீதும் எனது பெரியப்பா, பெரியம்மா மீதும் புகார் கொடுத்து அதன் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டுஅவ்வழக்கில் நாங்கள் முன் ஜாமீன் பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக தான் எதிரிகளுக்கு எதிராக இந்த வழக்கை நாங்கள் கொடுத்து இருந்தோம் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது நான் சம்பவயிடத்திற்கே செல்லவில்லை என்றாலும், செல்லாமலேயே சென்றதாகவும் சம்பவத்தை பார்த்தாகவும் சம்பவத்தில் எனக்கு அடிப்பட்டதாகவும் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது நான் வாணியம்பாடியில் இருந்து எனது ஊருக்கு இருச்சக்கர வாகனத்தில் சென்றபோது நிலை தடுமாறி கீழே விழுந்ததினால்தான் எனக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 11.07.2021 ம் தேதி சிகிச்சையில் இருந்தபோது போலிசார் விசாரித்த பிறகு மீண்டும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் யாரும் என்னைதாக்கவில்லை என்றாலும், அசா1 எனது பெரியப்பா என்பதால் அவருக்கு சாதகமாக நான்பொய் சாட்சியம் அளிக்கிறேன்என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்.

(ஒம்.) வேல்முருகன்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./-) D.Ravi

Judicial Magistrate (FAC), Vaniyambadi.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 127/ 2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.6**

| | | | |
|---|---|---|---|
| Name : | தேவராஜ் | Calling: | ஓட்டுநர் |
| Father's Name: | மணி | Religion: | இந்து |
| Village: | கொத்தகோட்டை | Age: | 45 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 16.08.2022

| |
|---|
| SIGN : |

அ.சா. 6 முதன்மை விசாரணை.

நான் கொத்தகோட்டையில் வசித்து ஓட்டுநர் வேலை செய்து வருகிறேன். அசா்1 மணி எனது அப்பா ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். 11.07.2021 காலை 7 மணிக்கு நான் வாணியம்பாடிக்கு வந்து கொண்டிருந்தபோது போன் மூலம் எனது மனைவி தொடர்பு கொண்டு நிலததிடம் எதரிகள் என் அப்பாவிடம் சண்டை போட்டு கொண்டு இருப்பதாக எனக்கு தகவல் சொனனார். தகவலை கேள்விப்பட்டு சம்பவயிடம்போய் பார்த்தபோது எங்கள் நிலத்தில் இருந்த எலும்பிச்சை மற்றும் முருங்கை செடிகளை எதிரிகள் வெட்டி இருந்தார்கள். அதை கேட்க போன எனது அப்பாவை ஆனந்தன் என்பவர் கத்தியால் வெட்ட வந்தார் அப்போது நான் கத்தியை பிடிங்கிக்கொண்டேன் அப்போது மோனிஸ் கத்தியை பிடுங்கி எனது அப்பாவின் வலது கையை வெட்டிவிட்டார். எனது சித்தப்பா வேல்முருகனை எதிரி அரவிந்த் இரும்பு கம்பியால் மார்பு மீதும் பின் புற தோள்பட்டை மீதும் அடித்து விட்டார் எனது சித்தப்பா சிவலிங்கத்தை வலது கை மோதிர விரலில் மண்வெட்டியால் ஆனந்தன் வெட்டி விட்டார். காயம்பட்ட எனது அப்பாவை நான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். மற்றவர்களும் சிகிச்சைக்கு வந்து சிகிச்சை பெற்றார்கள். காயம்பட்ட மூவரும் 2 நாட்கள் சிகிச்சை பெற்று வந்தோம். நான் சம்பவத்தைகேள்விப்பட்டு சம்பவயிடத்திற்கு சென்றபோது இந்த சம்பவத்தை நேரில் பார்த்தேன். இந்த சம்பவத்தை சிவக்குமார், சக்கரபாணி, வெங்கடாசலம் ஆகியோர்கள் நேரில் பார்த்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

11.07.2021 ம் தேதி அரசு மருததுவமனையில் நான் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அசா1 என்னுடைய தகப்பனார் என்றால் சரிதான். நான் சம்பவத்தின் போது வெளியில் சென்று இருந்தேன் என்றும், காயம்பட்டவர்களை மருத்துவமனையில் தான் நான் சென்று பார்த்ததாகவும் போலிசார் விசாரைணயில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தின் போது சம்பவயிடத்திற்கு சென்று விட்டேன். போலிசார் விசாரணையில் உள்ள சங்கதிகள் தவறு என்றால் சரிதான். நான் சம்பவத்தினை நேரில் பார்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. அது தான் உண்மை. 11.07.2021ம் தேதி எதிரிகளை நானும் எனது பெற்றோர் மற்றும் சகோதர்கள் சேர்ந்து தாக்கினார்கள் என்றாலும் அது சம்மந்தமாக அவர்கள் கொடுத்த புகாரின்பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் நாங்கள் முன் ஜாமின் பெற்று இருக்கிறோம் என்றாலும் சரியல்ல. அந்த வழக்கில் இருந்து தப்பித்து கொள்வதற்காக தான் எனது பெரியப்பாவை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்து இருக்கிறோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், அசா1 எனது தந்தை என்பதால் அவருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கில் சம்மந்தப்பட்ட கத்தி, மண்வெட்டி, கம்பி போன்றவற்றை யார் போலிசாரிடம் எடுத்து கொடுத்தார்கள்என்றால் போலிசார் வந்து பார்த்தார்கள் தேவைப்படும்போது எடுத்துக்கொள்வதாக கூறிவிட்டு சென்று விட்டார்கள்.

மறு விசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்.
(ஒம்.) தேவராஜ்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./-) D.Ravi
Judicial Magistrate (FAC), Vaniyambadi.

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 127/ 2021

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.7**

| | | | |
|---|---|---|---|
| Name : | திருப்பதி | Calling: | மேஸ்திரி |
| Father's Name: | அர்சுணன் | Religion: | இந்து |
| Village: | கொன்னாம்பட்டி | Age: | 37 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 16.08.2022

SIGN :

அ.சா. 7 முதன்மை விசாரணை.

நான் கொன்னாம்பட்டியில் வசித்து மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். 12.07.2021 ம் தேதி காலை 10 மணிக்கு என் நிலத்தில் நான் இருந்தபோது உதவி ஆய்வாளர் சம்பவயிடம் வந்து என்ன நடந்தது என்று விசாரித்து என்னிடம் கையெழுத்து வாங்கினார் மேலும் மேப்பும் போட்டார்கள். அப்பொழுது நான் அங்கிருந்தேன். அதற்காக சாட்சி கையெழுதது போட்டேன். (**பார்வை மகசர் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் நான் மேஸ்திரி வேலை செய்கிறேன். எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது கையெழுத்து மட்டும்போடுவேன் என்றால் சரிதான். மணி என்பவர் சொத்து பக்கத்தில் எனது சொத்து உள்ளது என்றால் சரிதான். 12.07.2021 ம் தேதி போலிசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் 10 மணிக்கு நான் நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது என்னிடம் அவர்கள் வந்து போனதற்காக கையெழுத்து கேட்டதால் நானும் போட்டேன். நான் எழுதப்படாத வெள்ளை பேப்பரில தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். அந்த கையொப்பம் தான் தற்போது நீதிமன்றத்தில் காட்டிய கையொப்பம் என்றால சரிதான். தற்போது அந்த பேப்பரில் என்ன எழுதியிருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது நிலத்தில் உட்கார்ந்து தான் மேப்பை வரைந்தார்கள் என்றால் இலலை. மணியின் நிலத்தில் தான்

மேப்பை வரைந்தார்கள். மணி தான் படம் வரைந்த போலிஸ் மேடத்தை கூட்டிவந்தார் என்றால் சரிதான். மேப்பில் நான் கையொப்பம் இட்டேனா என்றால் இல்லை.வெள்ளை பேப்பரில் மட்டும் தான் கையொப்பம் செய்தேன். அசா1 எனது சித்தப்பா ஆவார். அவர் கேட்டுக்கொண்டதினால் தான் இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். பார்வை மகசரில் காணப்படும் 2வது கையெழுதது என்னுடையது.

மறு விசாரணை இல்லை.
சாட்சி கையொப்பம்.
(ஓம்.) திருப்பதி

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./-) D.Ravi
Judicial Magistrate (FAC), Vaniyambadi.